Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTU
CC NO. **84/2017**
**Depostitions of PW- 3 Witness for**

| | |
|---|---|
| Name | மணிகண்டன் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22$^{th}$ day of November 2023.

Signature of Witness.

22.11.2023

3 ம் எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

கேள்வி – உங்கள் பெயர் என்ன ?

பதில் – மணிகண்டன்.

கேள்வி – அப்பாவின் பெயர் என்ன ?

பதில் – பாண்டியன்

கேள்வி – அம்மாவின் பெயர் என்ன ?

பதில் – பேச்சியம்மாள்

கேள்வி – இது என்ன இடம் என்று தெரியுமா ?

பதில் – தெரியாது.

கேள்வி – நான் யார் என்று தெரியுமா ?

பதில் – தெரியாது.

கேள்வி – நீங்கள் என்ன படிக்கிறீர்கள் ?

பதில் – நான் படிக்கவில்லை.

கேள்வி – வயது என்ன உங்களுக்கு ?

பதில் – 15 வயது.

கேள்வி – மகாலிங்கம் உங்களுக்கு என்ன வேண்டும் ?

பதில் – தெரியாது.

கேள்வி – பொய் சொல்லாமா ?

பதில் – சொல்லக்கூடாது.

சாட்சி கேட்கின்ற கேள்விகளை புரிந்து கொண்டு தயக்கமாக மேற்கண்டவாறு பதில் அளித்துள்ளதாலும், சாட்சி கேள்வியை புரிந்து பதில் அளிக்கிறார் என்பதாலும், அவர் சாட்சியம் அளிக்க தகுதியானவர் என்று முடிவு செய்து அவரது சாட்சியம் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்படுகிறது. சாட்சிக்கு இது இந்நீதிமன்றம் என்றும், நான் நீதிபதி என்றும், நீதிமன்றத்தின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கிக் கூறப்பட்டது.

<u>முதல் விசாரணை–</u>

நான் செண்பகத்தோப்பில் இருக்கிறேன். அ.சா. 1 பாண்டியன் எனது அப்பா. அ.சா. 2 மகாலிங்கத்தினை காட்டி யார் என்று சாட்சியிடம் கேட்டபோது மகாலிங்கம் என்று கூறுகிறார். விளையாடுவதற்காக நானும், அ.சா.2 மகாலிங்கமும் சக்கரத்தாழ்வார் கோவிலுக்கு போனோம். அங்கு பக்கத்தில் இருந்த தோப்புக்கு போனோம். அந்த மாந்தோப்பில் சிவப்பு கலர் டேப் ஒட்டப்பட்டு டப்பா இருந்தது. அதை எடுத்து எங்கள் காலனிக்கு கொண்டு போனோம். டேப்பினை உரித்துவிட்டு கல்லை வைத்து அதை தட்டினோம். அது வெடித்துவிட்டது. அதில் மகாலிங்கத்திற்கு இடது கை பெருவிரல் போய்விட்டது. எனக்கு இடது காலில் அடிபட்டது. சாட்சிக்கு இடது முழங்காலுக்கு கீழே தழும்பு உள்ளதை காட்டி கூறுகிறார். அதற்கு பின்

என்னையும், மகாலிங்கத்தினையும் பாரஸ்ட்காரங்க ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போனாங்க. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>–

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.